**கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பு - 2023**

---

கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டம் மற்றும் கொவிட் 19 அவசரகால பதிலளிப்பு மற்றும் சுகாதார முறைமைகளின் தயார்நிலை செயற்திட்டத்திற்கான இரண்டாவது மேலதிக நிதியளிப்பின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 2020 ஏப்ரல் 02 ஆம் திகதிய பிஏடி 3852 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 52 ஆம் பிரிவு மற்றும் 2021 ஏப்ரல் 22 ஆம் திகதிய பிஏடி 4442 ஆம் இலக்க உலக வங்கி அறிக்கையின் 71 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ அலகு (PMU) அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. கொவிட்-19 ஆல் திணிக்கப்படும் அச்சுறுத்தலைத் தடுத்தல், கண்டறிதல் மற்றும் பதிலளித்தல் மற்றும் இலங்கையில் பொது சுகாதாரத் தயார்நிலைக்கான தேசிய முறைமைகளை வலுப்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 41,717.45 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 209.11 மில்லியனானதுடன் அதில் ரூபா 12,271.25 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 61.51 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 29,446.20 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 147.60 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 ஏப்ரல் 04 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல்வேறு காரணங்களால் செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில் லை. | முகாமைத்துவ சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதி திருத்தப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாண இல. 756 (1) மற்றும் 756 (6) | குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் வருடாந்த பொருள் மெய்மையாய்விற்காக மெய்மையாய்வு சபை ஒன்று நியமிக்கப்பட்டு, இருப்புப் பொருட்களை கணக்கெடுத்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் ரூபா 73 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆகியவற்றை மெய்மையாய்வு செய்வதற்கு செயற்திட்டங்கள் முறையான மெய்மையாய்வு சபையை நியமித்திருக்கவில்லை. மேலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையை தயாரித்திருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு சபை உறுப்பினர்கள் முறையாக நியமிக்கப்பட்டுள்ளனர். பொருள் மெய்மையாய்வு அறிக்கை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த உடன்படிக்கையின் பொதுவான நிபந்தனைகள் | ஒப்பந்த ஏற்பு கடிதம் கிடைத்த 14 நாட்களுக்குள் நிர்மாண பணிகள் தொடங்கியிருக்க வேண்டிய போதிலும் 51 நாட்கள் தாமதத்துடன் நிர்மாண பணிகள் தொடங்கியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2022 யூலை 12 ஆம் திகதிய ஒப்பந்ததாரரின் கடிதம், நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் காரணமாக தொடர்புடைய வங்கிகளிடமிருந்து செயலாற்றல் பிணைமுறியை பெற்றுக்கொள்வதற்கு 21 நாள் அங்கீகாரத்தை கோரியுள்ளது. | விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிலைய கட்டிடத்தின் 1,292.2 சதுர அடி பரப்பளவை ரூபா 4.6 மில்லியனுக்கு இந்த செயற்திட்ட அலுவலகத்தை 02 ஆண்டுகளுக்கு தொடர்வதற்கான குத்தகை உடன்படிக்கை 2021 ஒக்தோபர் 13 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் 18 அளவில், குத்தகை உடன்படிக்கை முடிவடைந்து 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையை நீடிப்பதற்கு எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், முறையான குத்தகை உடன்படிக்கை இன்றி 2023 ஒக்தோபர் முதல் 2024 ஏப்ரல் வரை ரூபா 1.5 மில்லியன் வாடகையாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மோசடி மற்றும் பிழைகள் ஏற்படலாம். | சுகாதார அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் வாடகை உடன்படிக்கை முறையாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பதிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வரைவு உடன்படிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 500 பெஸ்கார்ட் (Pesguard) (01 லீற்றர்) அலகுகளுக்கு ரூபா 10 மில்லியன் செலுத்தப்பட்டது. தொடர்புடைய ஒப்பந்த | நட்டங்களை ஏற்படுத்துகிறது. | யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 08 சந்தர்ப்பங்களில் 01 லீற்றர் பெஸ்கார்ட்டின் 169 அலகுகள் | பொருட்களை ஏற்றுக்கொண்ட நபரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம், இவற்றின் செயற்படும் ஆயுட்காலம் 03 வருடங்களாக இருக்க வேண்டியிருந்த போதிலும் வழங்கப்பட்ட பொருட்களின் செயற்படு ஆயுட்காலம் 01 வருடம் மற்றும் 04 மாதங்கள் மாத்திரமே ஆகும். | | வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (இ) | தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு 1500 அலகுகளுக்கு ரூபா 29 மில்லியன் செலுத்தப்பட்டது, எனினும் இந்த இருப்புக்கள் வழங்கப்படாமல் எஞ்சியிருந்ததுடன் அவை 2025 திசெம்பர் 16 இல் காலாவதியாகும். | நட்டங்களை ஏற்படுத்துகிறது. | இந்த பூச்சிக்கொல்லிகளை வழங்கும் போது, நிறுவனங்களின் தேவைக்கேற்ப அவை கட்டுப்பாட்டுடன் வழங்கப்படும். மேலும் காலாவதி திகதியின் அடிப்படையில் மாத்திரம் வழங்கப்படாது.<br><br>தொற்றுநோய் மற்றும் மிகை தொற்றுநோய் நிலைகளில் டெங்கு நோயின் பரவலின் அடிப்படையில் இந்தத் தேவை மாறுபடும் என்பதை தயவுசெய்து குறித்துக் கொள்ளவும். | நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |